DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw4

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | காளியம்மாள் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/10/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பங்காருபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில் வேலைக்கு செல்வேன். 2014 ஆம் வருடம் தேதி சரியாக ஞாபகம்இல்லை. மதியம் 1.30 மணி இருக்கும். நான் வீட்டிலிருந்து ஜி.வி.ஜி. மில்லிற்கு வேலைக்கு செல்வதற்காக மில்லிற்கு சொந்தமான வாகனத்தில் வேலை பார்க்கும் நபர்களுடன் சென்று கொண்டிருந்தபோது கேதையறும்பு அருகே நாங்கள் வந்த வாகனம் திரும்பும்போது சாய்ந்து விபத்து ஏற்பட்டது. அதில் சின்னக்காளை மனைவி பார்வதி இறந்துவிட்டார். எங்கள் அனைவரும் காயங்கள் ஏற்பட்டது. எனக்கு இடது கண், இடது கை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. பிறகு எங்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நாங்கள் வந்த வாகனத்தை மனோஜ் என்பவர் ஓட்டிவந்தார். ஆஜர் எதிரி தான் மனோஜ் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 12.05.2014 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக எங்கள் ஊரில் இருந்து ஜி.வி.ஜி மில்லிற்கு TN 57 Q 0979 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா வேனில் சென்று கொண்டிருந்தபோது மகேந்திரா வேனை மனோஜ்குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம்

மெயின் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டிவந்து திடீரென பிரேக் போட்டதால் வேனானது கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் வலது புறம் இருந்து கேதையறும்பு ரோடு பிரிவில் இடது புறம் ஓடையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றும் அதில் பார்வதி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், வேனில் இருந்த எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN
Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.10.07 17:38:47 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 07/10/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw5

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரபாகரன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ராமன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/10/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் வேலை செய்து வருகிறேன். 2014 ஆம் வருடம் நான் ஜி.வி.ஜி. மில்லில் வேலை பார்த்து வந்தபோது தேதி சரியாக ஞாபகம் இல்லை. மதியம் 1.30 மணி இருக்கும். ஜி.வி.ஜி. மில் வேலைக்காக வேலை ஆட்களை ஏற்றிக்கொண்டு மகேந்திரா வேன் வந்தது. அதில் நானும், மில் வேலைக்காக ஏறி சென்று கொண்டிருந்தபோது செம்மடைப்பட்டி அருகே சட்டையப்பனுார் ரோட்டில் மனோஜ்குமார் மகேந்திரா வேனை வேகமாக ஓட்டிவந்ததால் வேன் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு இடது தோள்பட்டை இடது பக்கங்களில் காயம் ஏற்பட்டது. காளியம்மாள் என்பவருக்கு கைகளில் காயம் ஏற்பட்டது. ராஜம்மாள் என்பவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. சசிகலா என்பவருக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. எங்களை வேம்பணன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். ஆஜர் எதிரி தான் மனோஜ்குமார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்து இரண்டு, மூன்று நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்டபோது வேனில் எந்த பக்கம் உட்கார்ந்து இருந்தேன் என்றால் கடைசி இருக்கையில் உட்கார்ந்து இருந்தேன். விபத்து நடந்தவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். இரண்டு, மூன்று நாட்கள் மயக்கம் இருந்ததா என்றால் இருந்தது. மயக்கத்திற்கு பின்பு இரண்டு, மூன்று நாட்கள் கழித்து உறவினர்களிடம் விசாரித்த பின்பு தான் எனக்கு விபத்து பற்றி

தெரிந்தது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டவில்லை என்றாலும், அதனால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.10.07 17:38:57 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 07/10/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw8

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜம்மாள் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/10/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பங்காருபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 11 வருடங்களுக்கு முன் இருக்கும் மதியம் 1.30 மணிக்கு ஜி.வி.ஜி.மில்லிற்கு வேலை செல்வதற்காக ஜி.வி.ஜி.மில்லிற்கு சொந்தமான மகேந்திரா வேனில் வேலைக்காக ஏற்றி சென்று கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி மனோஜ் என்பவர் வேகமாக வேனை ஓட்டி சென்றதால் வேன் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதில் எனக்கு இடுப்பில் பலத்த காயம் ஏற்பட்டது. விபத்தில் பார்வதி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மற்ற அனைவரும் காயங்கள் ஏற்பட்டது. எங்கள் அனைவரையும் வேம்பணன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விபத்து நடந்து நான்கு, ஐந்து நாட்கள் கழித்து விசாரணை செய்தார்களா என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். மயக்கம் எத்தனை நாட்கள் இருந்தது என்றால் மூன்று நாட்கள் இருந்தது. மயக்கம் தெளிந்தபின்பு உறவினர்களிடம் விசாரித்தபோது தான் விபத்து பற்றி சொன்னார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல்

எதிரி வேகமாக வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரியல்ல. குறுக்காக ஒரு நபர் வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN Digitally signed by S KABALEESWARAN Date: 2025.10.07 17:39:03 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 07/10/2025